1972 மார்ச் 1]

பெற்றுவிட்டன. செக்யூரிடி டெபாசிட் கட்டி, மின்சாரத்தைப் பெறவேண்டியது பஞ்சாயத்தின் கடமை. வாரியத்தில் எந்தத் தவறும் இல்லை.

அரசு பேருந்துகளில் வேகமானிகள்

*274 வினா—திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு உந்து வண்டிகளில், ஸ்பீடோ 'மீட்டர்' களைப் பொறுத்தி வேகத்தை நிர்ணயிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாவட்டப் பேருந்து களில் வேகமானிகளைப் (Speedo meters) பொருத்தும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. மாநகரப் பேருந்துகளைப் பொறுத்தவரை, வேகமானிகளைப் பொருத்துவது சிக்கனமற்றது என்று கருதப்படுகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, டி.வி.எஸ். நிறுவனத் தில் ஸ்பீடோ மீட்டார்கள்—வரைவுமானிசன் பொருத்தப்பட்டு, நல்ல முறையில் பேருந்துகள் நடத்தப்பெற்றுள்ளன. அதைப போல வருங்காலத்திலாவது பாண்டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில் பேருந்துகளுக்குப் பொருத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஸ்பீடோ மீட்டர்—வேகமானி—என்று ஒன்று இருக்கிறது. டேக் கோ மீட்டர்—வரைவுமானி—என்று ஒன்று இருக்கிறது. வேக மானி என்பது வேறு. வரைவுமானி என்பது வேறு. பாண் டியன் பஸ் போக்குவரத்து நிறுவனத்தில், டி.வி.எஸ். நிறுவனத்தில் உள்ளதைப்போல வரைவுமானி இருக்கிறது. அரசாங்கப் போக்குவரத்துத் துறையிலும்கூட விரைவு பேருந்துகளில் டேக்கோ மீட்டர்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. கனம் உறுப்பினர் எப்படிக் கருதுகிறாரோ அதைப்போன்றே பாண்டியன் பஸ் போக்குவரத்துக் கழகத்திலும் தொடர்ந்து நீடித்து, அந்த முறைகள் செயல்பட்டுவருகின்றன.